සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I
தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் I
Communication and Media Studies I

29 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள்:**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத்** தரப்பட்டுள்ள **அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X)** இடுவதன் மூலம் காட்டுக.

**1.** "சமூகமானது தொடர்பாடலினால் பராமரிக்கப்படும் ஓர் உறவுசார் வலைப்பின்னலாகும்". இச் சிந்தனையை அறிமுகப்படுத்தியவர்
(1) வில்பர் ஷ்ராம் (2) எட்வேர்ட் சப்பியர்
(3) ஹரோல்ட் டீ. லாஸ்வெல் (4) சார்ள்ஸ் ஒஸ்கூட்
(5) சார்ள்ஸ் கூலி

**2.** தொடர்பாடல் செயன்முறை தொடர்ந்தியங்குவதற்கு முக்கிய அம்சமாகத் தேவைப்படுவது
(1) அனுப்புநர் (2) பெறுநர் (3) தாக்கம் (4) செய்தி (5) வழிமுறை

**3.** வானொலிச்செய்தி ஒலிபரப்பில் பயன்படுத்தப்படும் மொழியின் ஒரு பலவீனமாகக் கருதக்கூடியது
(1) வஞ்சப்புகழ்ச்சி (irony) (2) தெளிவு
(3) சுருக்கம் (4) எளிமை
(5) படைப்பாக்கம்

**4.** பின்வரும் ஊடகக்கருவிகளுள் பிரஜைகள் ஊடகப் (citizen media) பாவனையில் ஆகக் குறைந்த தகைதிறன் கொண்டது எது ?
(1) செல்லிடப்பேசி (2) மின்னஞ்சல்
(3) வலைப்பூக்கள் (Blogs) (4) ஸ்கைப்
(5) இணையத்தளங்கள்

**5.** பின்வருவனவற்றுள் குறித்தவோர் ஆலோசனை, அபிப்பிராயம் அல்லது சிந்தனையை மிகச் சுருக்கமாக எடுத்துச்சொல்லத்தக்க வினைத்திறன் மிக்க மூலம்
(1) நாட்டார் கதைகள் (2) நாட்டார் பாடல்கள்
(3) பழமொழிகள் (4) விடுகதைகள்
(5) நாட்டார் கவிதைகள்

**6.** அச்சிடல் தொழினுட்பத்தின் தோற்றம் தொடர்பில் வரலாற்றில் ஆக முன்னையதும் மிகப் பின்னையதுமான தகவல்கள் கிடைக்கப்பெற்றது
(1) இங்கிலாந்திலும் ஜேர்மனியிலும் (2) கிரேக்கத்திலும் உரோமிலும்
(3) இந்தியாவிலும் அமெரிக்காவிலும் (4) சீனாவிலும் ஜேர்மனியிலும்
(5) எகிப்திலும் ஜேர்மனியிலும்

**7.** தொடர்பாடலை வகைப்படுத்துவதற்கு அடிப்படை அம்சமாகப் பயன்படுத்தப்பட்டது
(1) சூழல் (2) தனியாள் நடத்தை
(3) பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை (4) வழிமுறை
(5) தொடர்பாடல் திறன்

**8.** அபிவிருத்திச் செய்தியொன்றில் **உள்ளடக்கப்படாத** ஒரு விடயம்
(1) நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்திச் செய்தியொன்றை இணைத்துக்கொள்ளல்
(2) சமூக சந்தைப்படுத்தல் செய்தியின் தன்மை
(3) ஒரு வணிக நோக்கம்
(4) தெரிவுசெய்யப்பட்ட ஓர் இலக்கு
(5) நிச்சயிக்கப்பட்ட ஓர் இலக்குப் பெறுநர் குழு

[பக். 2 ஐப் பார்க்க

9. வெகுசன ஊடகத்துறையில் பெருமளவிலான வாயிற்காப்பாளர்களைக் காணக்கிடைக்கிறது. அவர்களின் அடிப்படைச் செயற்பாடாக அமைவது
(1) செய்தி விநியோகத்தைக் கட்டுப்படுத்தல்
(2) தீங்குபயக்கும் விளைவுகளுக்கு காரணமாதல்
(3) ஊர்ஜிதமான தகவல்களை வெளியிடல்
(4) ஆட்சியாளர்களை வெளியகற்றும் விதமாகப் பணியாற்றுதல்
(5) நிதிசார் ஆதாயங்களைப் பெற்றுக்கொள்ளல்

More Past Papers at
tamilguru.lk

10. இலங்கைச் சமூகத்தில் பிரசித்த பண்பாட்டின் பரவுகையை ஒரு சமூக அனுபவமாக்குவதில் மிகப் பெருமளவில் பங்களிப்புச் செய்யும் ஊடகம்
(1) திரைப்படம் (2) வானொலி (3) தொலைக்காட்சி
(4) செய்திப்பத்திரிகை (5) மேடை நாடகங்கள்

11. அபிவிருத்திச் செயற்பாடுகளில், ஒரு நாட்டின் வெகுசன ஊடகங்கள் தேசிய நிகழ்ச்சித்திட்டம் (National Agenda) ஒன்றை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்கின்றன. இதன் மூலம் எடுத்துக்காட்டப்படுவது
(1) முன்னுரிமை அடிப்படையில் செயற்றிட்டங்கள் அமைக்கப்படுதல்
(2) அபிவிருத்திச் செயற்பாட்டிலுள்ள பலவீனம் இனங்காணப்படுதல்
(3) மக்களிடம் நடத்தைசார் மாற்றத்தை உருவாக்குதல்
(4) அபிவிருத்திச் செயற்பாடுகளை விமர்சனம் செய்தல்
(5) அபிவிருத்திக்குப் பொதுமக்களைத் தயார்படுத்தல்

12. மகாவலித் திட்டத்தின் கீழான, இலங்கையில் சமூக வானொலிச் சேவை ஒலிபரப்புகளை மாத்திரம் கொண்ட தொகுதி
(1) கிராந்துருகோட்டை, மகாஇலுப்பள்ளம, கொத்மலை
(2) மகாவலி, ஊவா, ருகுணு
(3) கிராந்துருகோட்டை, ரஜரட்டை, கொத்மலை
(4) மகாவலி, புளதிசிராவய, ரஜரட்டை
(5) மகாஇலுப்பள்ளம, ஊவா, ரஜரட்டை

13. வெகுசன ஊடகக் கருத்தாக்கத்தின்படி புலமைசார் சொத்துடைமைச் சட்டம் மற்றும் இலங்கைப் பத்திரிகைச் சபைச் சட்டம் ஆகியன தொடர்புறுவது
(1) அதிகார ஆதிக்க எண்ணக்கரு (2) தாராண்மைவாத எண்ணக்கரு
(3) ஜனநாயக எண்ணக்கரு (4) அபிவிருத்திசார் எண்ணக்கரு
(5) சமூகப் பொறுப்புடைமை எண்ணக்கரு

14. வேலை தொடர்பான தனது முதலாவது நேர்காணலுக்கு வீட்டிலிருந்து காலையில் புறப்பட்ட விஜய், தான் செல்லும்வழியில் கந்தையுடுத்திய ஒரு பிச்சைக்காரன் தன்னை நோக்கி வருவதைக் கண்டான். தனது நேர்காணல் வெற்றிகரமின்றி அமையுமென அவன் எண்ணினான். இவ்வாறான ஒரு சிந்தனை அவனிடம் அமையப்பெற்றது
(1) சமயம்சார் உணர்வுகளால் (2) பகுத்தறிவுக்கு ஒவ்வாத கதைகளை வாசிப்பதால்
(3) துணிகரமான உணர்வுகளால் (4) நாட்டார் நம்பிக்கையால்
(5) நாட்டார் படைப்புகளை வாசிப்பதால்

15. வெகுசன ஊடகம் தொடர்பில் **பொருத்தமற்ற** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) ஊடக உரிமையாண்மை ஊடகத் தன்னாதிக்கத்திற்கு இட்டுச்செல்கிறது.
(2) செய்திகள் எப்போதும் மேலிருந்து கீழாக எடுத்துச் செல்லப்படுகின்றன.
(3) தேர்தல் அரசியல் இப்போதும் செய்தி வெளியீடுகளில் முக்கிய இடம்பிடித்துக்கொள்கிறது.
(4) பூகோளத் தகவல் கிராமம் வெகுசன ஊடகத்தின் ஓர் உப விளைபொருள்.
(5) பெறுநர்களின் செயலாக்கம் மிக்க பங்கேற்பு இங்கு காணக்கிடைக்கும்.

16. பிரச்சினை நிகழும் சந்தர்ப்பமொன்றில் ஊடக மாநாடு வழியாகத் தகவல்களை வெளிப்படுத்துவது ஒரு வெகுசனத் தொடர்புத் தந்திரோபாயமாகும். ஊடகவியலாளர் ஒருவரின் பார்வையில் இது முக்கியமாக அமையக் காரணமாவது
(1) தகவல் பெருமளவில் கிடைக்கும்
(2) பெறப்படும் தகவல் பற்றிக் கேள்வியெழுப்பும் சாத்தியம்
(3) அதிகாரத்தில் உள்ளவர்களுடன் நேருக்குநேர் சந்திப்பு
(4) குறைந்த நேரத்தில் நிறைவுபெறல்
(5) அனைத்து ஊடகங்களுக்கும் பொருத்தமான வகையில் தகவல் பெறத்தக்கதாக அமைதல்

17. வெகுசன ஊடகங்களில் அபிவிருத்திச் செய்திகளுக்கான நேரமும் வெளியும் இடம்பெறப்பெற்றிருப்பதன் காரணமாக அமைவது
(1) வெகுசன ஊடகங்கள் அரசியல்மயப்படுத்தப்பட்டிருப்பதால்
(2) பொதுசன சேவை எண்ணக்கருவுக்கான ஏற்புடைமை
(3) புதிய தொழினுட்பம் வெகுசன ஊடகங்களுடன் இணைப்பு
(4) வெகுசன ஊடகங்களின் வணிகமயமாக்கம்
(5) மேலைத்தேயமயமான தகவல் விநியோகம்

[பக். 3 ஐப் பார்க்க

**18.** ஊடகப் பண்பாடு பற்றிய வானொலி நிகழ்ச்சியொன்றில் கலந்துரையாடப்பட்ட சில பார்வைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.
A - இது மேலைத்தேயப் பண்பாட்டின் அடிப்படையிலானது.
B - இது ஊடகத் தொழினுட்பத்துடன் இணைச்சேர்க்கையானது.
C - சமூக இயங்கியலுக்கு அமைவாக ஒழுங்குபடுத்தப்பட்டது.
D - இயற்கையான ஒரு செயன்முறை என்பதை விட இது திட்டமிடப்பட்ட ஒரு செயன்முறையாகும்.

மேற்குறித்தவற்றில் உண்மையானவை
(1) A, B ஆகியன மாத்திரம் (2) A, C ஆகியன மாத்திரம்
(3) A, B, C ஆகியன மாத்திரம் (4) B, C, D ஆகியன மாத்திரம்
(5) A, B, C, D ஆகியன யாவும்.

**19.** யாப்பின்படி நிர்வாகிகளை மையப்படுத்திய நிறுவனமாக சமூகமொன்றில் அமைவது
(1) தொழிற்சங்கம் (2) மரணக்கொடைச் சங்கம்
(3) உள்ளூராட்சிச் சபை (4) கிராமிய கடனுதவிச் சங்கம்
(5) பெண்கள் நலன்புரிச் சங்கம்

**20.** ஒரு குழுவில் மாறுபட்டிருக்கும் கருத்துகளுக்கு **இடமில்லாதிருப்பதன்** காரணமாக அமைவது
(1) தாராண்மைவாதக் கருத்துகளுடனான நபர்கள் இருத்தல்
(2) கட்டுப்படுத்தப்பட்ட நபர்கள் இருத்தல்
(3) வேறுபட்ட பார்வைகளுடனான நபர்கள் இருத்தல்
(4) ஜனநாயகப் பார்வைகளுடனான நபர்கள் இருத்தல்
(5) நேர்த்தன்மை கொண்ட பார்வைகள் பற்றிய கலந்துரையாடல்

More Past Papers at
tamilguru.lk

**21.** மக்களிடையே சிந்தனைகளும் உணர்வுகளும் தொடர்பாடப்பட முடியும். எப்போது மாத்திரம் எனில்,
(1) பண்பாட்டு அம்சங்களின் பிரதிநிதித்துவம் இருக்கும்போது
(2) குறியீடுகளின் மூலம் பிரதிநிதித்துவம் இருக்கும்போது
(3) அறநெறிப் பண்புகளின் பிரதிநிதித்துவம் இருக்கும்போது
(4) ஆழ்பரிவின் பிரதிநிதித்துவம் இருக்கும்போது
(5) எப்போதும் அவற்றின் பயன்பாடு உள்ளபோது

**22.** மின்சாரத் தடை பற்றிய மக்களின் புகார்களைப் பெற்றுக்கொள்ள வேறுபட்ட வழிமுறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டன. அவற்றில் **ஆகக் குறைந்த** முக்கியத்துவம் பெறும் ஒன்றாக அமைவது
(1) தபால் மூலம் பெறுவது
(2) மின்னஞ்சல் மூலம் பெறுவது
(3) அவசர தொலைபேசி இலக்கமொன்றின் வழி அழைப்பை ஏற்படுத்த நெறிப்படுத்துவது
(4) கட்டணமில்லாத் அவசர தொலைபேசி இலக்கம் வழியே அழைப்பை ஏற்படுத்த நெறிப்படுத்துவது
(5) குறுஞ்செய்தி (SMS) ஒன்றைப் பெறுவது

**23.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - செய்தியொன்றின் வெளிப்படையான அர்த்தத்தையும் கடந்து புரிந்துகொள்ளல்
B - தனியாள் அனுபவங்களுடன் தொடர்பிலிருத்தல்
C - ஊடக விளங்கறிவின் விருத்தி
D - பொழுதுபோக்கின் தரமுயர்வு

மேற்குறித்தவற்றுள் வெகுசன ஊடகத்தில் படைப்பாக்க வாசிப்புடன் (creative reading) தொடர்புடைய மிகப் பொருத்தமான கூற்றுகள் எவை ?
(1) A, B ஆகியன மாத்திரம் (2) B, C ஆகியன மாத்திரம்
(3) A, B, C ஆகியன மாத்திரம் (4) A, C, D ஆகியன மாத்திரம்
(5) B, C, D ஆகியன மாத்திரம்

**24.** **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) இருபடிநிலை எண்ணக்கருவுடன் கருத்துருவாக்கத் தலைவர்களும் வழிநடப்போரும் சம்பந்தப்படுகின்றனர்.
(2) குழுத் தொடர்பாடல், பெறுநர்களின் எண்ணிக்கையால் மாத்திரம் தீர்மானிக்கப்படுகிறது.
(3) பெறுநர்களுக்கான செய்தியொன்றின் வழிச்செலுத்துகையானது வாயிற்காப்பாளரின் வகிபங்கில் தங்கியுள்ளது.
(4) நடிப்பு என்பது தனியாளை மையப்படுத்திய நிகழ்வாகக் கவனத்திற் கொள்ளப்படுகிறது.
(5) நவீன சமூகத் தேவைகள் ஊடகப் பண்பாட்டினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றன.

**25.** வெகுசன ஊடகங்களினால் முன்வைக்கப்படும் செய்திகள் கருத்துருவாக்கத் தலைவர்களால் மத்தியஸ்தப்படுத்தப்படுவது பற்றிய சிந்தனை
(1) வாயிற்காப்பாளர் எண்ணக்கரு
(2) இருபடிநிலை எண்ணக்கரு
(3) சமூகப் பொறுப்புடைமைக் கோட்பாடு
(4) 'கல்ரங்' இனது முரண்பாட்டுக் கோட்பாடு
(5) மாஸ்லோவின் தேவைகள் கோட்பாடு

[பக். 4 ஐப் பார்க்க

1638

**26.** ஒரு குறித்த செய்திப்பத்திரிகையொன்றின் ஆசிரியர்பீடக் கொள்கைகள் பின்வருமாறு பட்டியற்படுத்தப்பட்டன.

A - மரணமானோரின் உடலங்களின் படங்களைப் பிரசுரிக்காது தவிர்த்துக் கொள்ளல்
B - மதுசார பானங்கள் குறித்த விளம்பரங்களைப் பிரசுரிக்காதிருத்தல்
C - ஆசிரிய விளம்பரங்களை (advertorials) அனுமதிக்காது விடல்
D - சூதாட்டம் தொடர்பான செய்திகளை நிராகரித்தல்

மேற்படி கொள்கைகளை அறிமுகஞ்செய்யப் போதுமான மிகப் பொருத்தமான சொல்லாடலாக அமைவது எது ?

(1) தணிக்கை
(2) சுய கட்டுப்பாடு (self-regulation)
(3) சட்டத் தடைகள்
(4) நுகர்வோர் பாதுகாப்பு
(5) கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம்

**27.** வாய்மொழிப் பாரம்பரியத்தினூடாக வரும் நாட்டார் கதைகள் முக்கியமான தொடர்பாடல் முறையியலாக அமைகின்றன. ஏனெனில், அவை

(1) ஒரு படைப்பாக்கத் தொடர்பாடல் பயன்பாடாகும்.
(2) ஒரு தொடர்பாடல் மூலமாகும்.
(3) ஆட்களிடைத் தொடர்பாடலின் பயன்பாடாகும்.
(4) வாய்மொழித் தொடர்பாடலின் பயன்பாடாகும்.
(5) மரபார்ந்துவரும் தொடர்பாடல் முறைமையாகும்.

More Past Papers at
tamilguru.lk

**28.** பாடசாலையின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் வகுப்புத் தலைவராக, மாணவர் தலைவராக, வெவ்வேறு கழகங்களினதும் தலைவர், செயலாளராகப் பதவிகளை வகிப்பதன் மூலம் சமூகமயமாதல் முக்கியத்துவம் பெறுவது

(1) பண்புகளினால்
(2) வகிபங்காற்றுதலினால்
(3) ஆளுமையினால்
(4) அடையாளப்படுத்தலினால்
(5) பாவனைசெய்தலினால்

**29.** பின்வரும் நடத்தைகளில் ஆளுள் தொடர்பாடல் தேர்ச்சியாக **அமையாத** ஒன்று

(1) கற்பனை செய்தல்
(2) பகற்கனவு காணுதல்
(3) மீள நினைவூட்டல்
(4) கடந்துசென்றவை பற்றிய நினைவு
(5) நினைவில் நிறுத்துதல்

**30.** ஒரு முரண்பாட்டுக்குரிய வெற்றிகரமான தீர்வுக்கு, மிகப் பொருத்தமான முரண்பாட்டு முகாமைத்துவ வழிமுறையாக அமைவது

(1) கூட்டுச் செயற்பாடு
(2) போட்டி
(3) புறந்தள்ளல்
(4) முரண்பாடு நடைபெற அனுமதித்தல்
(5) சம்பிரதாயமான உடன்பாடு

**31.** வெகுசன ஊடகப் பெறுநர் தன்மையில் அவதானிக்கக்கூடிய ஓர் அம்சமாக இருப்பது எதுவெனில், அது பெறுநர்கள்

(1) செய்தியில் மாத்திரம் சம்பந்தப்படுகின்றனர்.
(2) ஒரு தனித் தேவைக்காக குழுவாக ஒருங்கிணைகின்றனர்.
(3) திட்டமிட்ட அமைப்பொழுங்கிலுள்ளனர்.
(4) அனுப்புநர்களுடன் நெருக்கமான தொடர்பைப் பேணுகின்றனர்.
(5) தெளிவாக எண்ணிடப்படக்கூடியவராகின்றனர்.

**32.** தொலைக்காட்சியில் இரவில் செய்தியைப் பார்த்த விஷ்வாவினால் அதில் காட்டப்பட்ட வெள்ளப்பெருக்குப் பற்றிய படங்கள் தெளிவாக இன்மையால் நாட்டின் தற்போதைய வெள்ளநிலை பற்றிய முழுமையான அவதானமொன்றைப் பெறமுடியாது போனது. தொடர்பாடல் கோட்பாட்டின்படி இது அறியப்படுவது

(1) தொலைக்காட்சியின் தொழினுட்பத் தவறு என
(2) சூழ்நிலையில் பிரச்சினை என
(3) ஊடக இடையூறு என
(4) அன்ரெனா தொடர்பின் சிக்கல் என
(5) தனியாள் வேறுபாட்டுக் கோட்பாடு என

**33.** சிறுவர் திரைப்படமொன்றின் பிரதான இயல்பாக இருக்க வேண்டியது

(1) சிறுவர் உலகத்தின் ஒரு பிரதிநிதித்துவம்
(2) திறன்வாய்ந்த அதிக சிறுவர்களின் பிரதிநிதித்துவம்
(3) ஓர் எளிமையான கதைக்கரு
(4) அனுபவமுள்ள நடிகர் மற்றும் நடிகைகளின் பிரதிநிதித்துவம்
(5) முழுமையான ஒரு பொழுதுபோக்கு

**34.** பாரம்பரிய ஊடகங்களின் முக்கியத்துவம் பற்றி வகுப்பறையில் நடந்த கலந்துரையாடல் வருமாறு:


- நிலா - பொதுமக்கள் அவற்றில் நம்பிக்கை வைத்துள்ளனர்.
- ஜெயந்தி - அவற்றில் பயன்படுத்தப்படும் குறியீடுகளும் சைகைகளும் பரிச்சயமானவை.
- வீணா - அவை பிரதிநிதித்துவம் செய்பவை உயர் குடிமக்களின் சிந்தனைகள் அல்ல.
- காவ்யா - ஆனால், அவற்றில் செயலூக்கமுள்ள பார்வையாளரின் பங்கேற்பு இருப்பதில்லை.

மேற்குறித்த கூற்றுகளில் சரியான சிந்தனைகளை முன்வைப்போர்

(1) நிலா, காவ்யா
(2) நிலா, ஜெயந்தி
(3) நிலா, ஜெயந்தி, காவ்யா
(4) நிலா, ஜெயந்தி, வீணா
(5) நிலா, ஜெயந்தி, வீணா, காவ்யா

[பக். 5 ஐப் பார்க்க

● **35** முதல் **38** வரையான வினாக்களுக்கு பின்வரும் மாதிரியின் அடிப்படையில் விடையளிக்குக.




More Past Papers at
tamilguru.lk

**35.** மேற்படி வரைபை ஒத்த மாதிரியை அறிமுகப்படுத்தியவர்
(1) வில்பர் ஷ்ராம் (2) டேவிட் கே. பெர்லோ
(3) ஷினொன் மற்றும் வீவர் (4) சார்ள்ஸ் ஒஸ்கூட்
(5) ஹரோல்ட் டீ. லாஸ்வெல்

**36.** மேற்படி மாதிரியில் குறிப்பிட்ட அம்சங்களின்படி, இது
(1) ஒரு வட்டவடிவ மாதிரி (2) ஒரு செயற்பாட்டு செயன்முறை மாதிரி
(3) ஒரு இருவழி மாதிரி (4) ஒருவழி செயன்முறை மாதிரி
(5) ஒரு கட்டமைப்பு மாதிரி

**37.** மேற்படி மாதிரியில் '**G**' தவறாவதற்கான காரணம்
(1) A யின் செல்வாக்கு (2) C யின் செல்வாக்கு
(3) E யின் செல்வாக்கு (4) F இன் செல்வாக்கு
(5) I யின் செல்வாக்கு

**38.** மேற்படி மாதிரியின் அடிப்படையில் '**H**' இற்கு மிகப் பொருத்தமானது
(1) அனுப்புநர் (2) செய்தி (3) பெறுநர்
(4) வழிமுறை (5) சேரிடம்

**39.** ஊடகத்தின் அடிப்படையும் முக்கியமானதுமான குறிக்கோள்
(1) அனைத்து நிகழ்வுகளையும் பெறுநர்களுக்கு தொடர்பாடல் செய்வது
(2) ஆளும் வர்க்கத்தின் கருத்தியலைப் பரப்புரை செய்வது
(3) சமூகத் தேவைகளை தகவல்களை முழுமையாக்குவதன் மூலம் நிவர்த்தி செய்வது
(4) சமூக பிரக்ஞையில் சமூக பிரஜைகள் விழுமியங்களை நிறுவிக்கொள்வது
(5) தற்போதைய விவகாரங்கள்-தீர்வுகள் குறித்த விழிப்புணர்வின் மூலம் பெறுநர்களை வலுவூட்டுவது

**40.** இரண்டு நபர்களுக்கிடையேயான முதலாவது சந்திப்பொன்றில் நிகழும் பொதுத் தொடர்பாடலில் காணக்கிடைக்கக்கூடிய சில அம்சங்கள் கீழே தரப்படுகின்றன.
A - பொதுவான தகவல்களைப் பகிர்ந்துகொள்ளல்
B - சிந்தனைகளை வெளிப்படையான மற்றும் முழுமையான நம்பிக்கையுடன் பரிமாறிக்கொள்ளல்
C - ஒருவருக்கொருவர் புன்னகையுடன் தலையை அசைத்துக் கொள்ளல்
D - தனிப்பட்ட தகவல்களைப் பரிமாறிக் கொள்ளல்
மேற்குறித்தவற்றிலிருந்து குறித்த தொடர்பாடல் செயன்முறையில் ஆரம்பத்திலிருந்து வரிசைக்கிரமமாக இடம்பெற்றிருக்கக்கூடிய நிகழ்வுகள்
(1) A, C, D மற்றும் B (2) B, C, D மற்றும் A
(3) C, A, D மற்றும் B (4) C, D, B மற்றும் A
(5) D, B, A மற்றும் C

**41.** வேறுபட்ட ஊடக விமர்சன அணுகுமுறைகளில் கவனத்திற் கொள்ளப்படும் சில அம்சங்கள் கீழே தரப்படுகின்றன.
A - சம்பவத்தை புதிய நோக்கில் பார்த்தல்
B - பார்வையாளரின் பிரக்ஞையை வளப்படுத்துதல்
C - பொழுதுபோக்கு அம்சங்களை ஆய்ந்தறிதல்
D - ஊக்கப்படுத்துதல்
மேலுள்ளவற்றிலிருந்து வரலாற்று அணுகுமுறையுடன் ஒத்திசையக்கூடிய மிகப் பொருத்தமானவையாக அமைவது
(1) A, B, C ஆகியன மாத்திரம் (2) A, B, D ஆகியன மாத்திரம்
(3) A, C, D ஆகியன மாத்திரம் (4) B, C, D ஆகியன மாத்திரம்
(5) A, B, C, D ஆகியன யாவும்.

**42.** ஊரக ஊடகத்தை (rural media) ஒரு தொடர்பாடல் முறையாகப் பயன்படுத்த **வழிதராத** போக்கு
(1) நெகிழ்வுத்தன்மை (2) குறைந்த செலவீனம்
(3) மக்களின் உணர்வுகளோடு நெருக்கம் (4) பரந்த விரிவாக்கம்
(5) பின்னூட்டத்திற்கான தகைமை

**43.** முரண்பாடொன்றில் நடுநிலையாளரின் வகிபங்கு
(1) தனித்தனியே கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல்
(2) பக்கச்சார்பாக நடத்தல்
(3) பாதிப்புகளைக் கேட்காதிருத்தல்
(4) முரண்பாட்டில் நேரடியாக சம்பந்தப்படுதல்
(5) வேறுபட்ட பார்வைகளுக்குச் சந்தர்ப்பமளிக்காதிருத்தல்

[பக். 6 ஐப் பார்க்க

**44.** அபிவிருத்தித் தொடர்பாடல் செயற்றிட்ட அறிக்கை ஒன்றானது எதிர்காலத் திட்டங்களுக்கு முக்கியமாகக் காரணம், அது
(1) இலக்குகள் மற்றும் குறிக்கோள் விபரங்களை உள்ளடக்கியிருத்தல்
(2) அனுசரணை வழங்குவோரின் விபரங்களைக் குறிப்பிட்டிருத்தல்
(3) தோன்றிய பிரச்சினைகள், குறைபாடுகளை உள்ளடக்கியிருத்தல்
(4) செயற்றிட்டக்குழு பற்றிய விபரத்தை வழங்குதல்
(5) அச்சிடப்பட்ட நூல் வடிவில் இருத்தல்

**45.** முன்னணியிலுள்ள சமய நிறுவனங்களின் போஷகர்களாக முனையும் பல நபர்களும் அரசியல் அதிகாரத்தில் ஆர்வம் கொண்டவர்களாக அடையாளங் காணப்பட முடிவதன் முக்கிய காரணமாக அமைவது
(1) ஆட்சிக்கு சமய வழிநடத்தல் அவசியமானது என்பதன் ஏற்புடைமை
(2) அரசியல் அதிகாரங்களில் அடையாளங் காணமுடியாத சக்திகள் செல்வாக்குச் செலுத்துகின்றன என்ற நம்பிக்கை
(3) அரசியல் அதிகாரக் கட்டமைப்பில் ஆன்மீகத் தலைமைத்துவம் முக்கிய அம்சங்களில் ஒன்றாக இருப்பது
(4) மக்களைக் கவரும் தந்திரோபாயமாக ஆன்மீகத்தில் நாட்டமிருப்பதாகக் காட்டும் ஒருவரின் நடத்தை
(5) அதிகார மையங்களில் ஓர் அம்சமாக புனிதமான பொருட்களும் சமயத் தலைமையும் நடந்துகொள்ளல்

**46.** புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான தடுப்பூசி வழங்கும் திகதிகள் சுகாதார வைத்திய அதிகாரியினால் திட்டமிடப்பட்டன. குறித்த திகதிகள் பற்றிய செய்தியை சம்பந்தப்பட்ட தாய்மாருக்குத் தெரியப்படுத்த மிகப் பொருத்தமான தொடர்பாடல் முறையாக அமைவது
(1) தொலைக்காட்சி (2) செய்திப்பத்திரிகைகள் (3) மின்னஞ்சல்
(4) குறுஞ்செய்தி (SMS) (5) பொதுசன அறிவிப்பு முறைமை (Public announcement system)

**47.** பொதுசனத் தொடர்பு அதிகாரியாக உங்களைக் கருதிக் கொள்க. பின்வரும் சில சந்தர்ப்பங்களில் உங்களது சேவை தேவையாக உள்ளது.
- அரசாங்கத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்படத் திட்டமிட்டிருக்கும் புதிய செயற்றிட்டம் பற்றிய விவரமான விளக்கத்தைப் பொதுமக்களுக்கு அளித்தல்
- மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெறவிருக்கும் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட ஆர்வம் கொண்டுள்ள இளம் சமூகச் செயற்பாட்டாளர் ஒருவரை அறிமுகப்படுத்துதல்
- மின்சாரத் தடத்தில் செய்யப்படவிருக்கும் திருத்தவேலை காரணமாக வாரஇறுதியில் ஏற்படவுள்ள மின்தடை பற்றி மக்களுக்குத் தெளிவுபடுத்துதல்

மேற்படி சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான நடவடிக்கைகளின் வரிசைக்கிரமம்
(1) ஊடக அறிவித்தல், ஊடக மாநாடு/கலந்துரையாடல், தனியாள் பிம்ப கட்டமைப்பு
(2) ஊடக மாநாடு/கலந்துரையாடல், ஊடக அறிவித்தல், தனியாள் பிம்ப கட்டமைப்பு
(3) ஊடக மாநாடு/கலந்துரையாடல், தனியாள் பிம்ப கட்டமைப்பு, ஊடக அறிவித்தல்
(4) ஊடக அறிவித்தல், தனியாள் பிம்ப கட்டமைப்பு, ஊடக மாநாடு/கலந்துரையாடல்
(5) தனியாள் பிம்ப கட்டமைப்பு, ஊடக மாநாடு/கலந்துரைாயடல், ஊடக அறிவித்தல்

**48.** ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு கணித எண்ணக்கருக்களை அறிமுகப்படுத்த, எண்சட்டகத்தினை ஒரு கற்பித்தல் கருவியாகப் பயன்படுத்தும் கணித ஆசிரியர் ஒருவரின் இலக்காக அமைவது
(1) எண்ணக்கருக்களை நிரூபிக்கும் திறனை விரிவாக்குதல்
(2) சிந்தனை ஆற்றலை வளர்த்தல்
(3) சிக்கலான எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வதிலுள்ள தடைகளை நீக்குதல்
(4) கற்றல் வழிமுறைகளில் ஒரு முன்னேற்றமாகப் பயன்படுத்துதல்
(5) எண்ணக்கருக்களை இலகுவாக நினைவில் நிறுத்திக்கொள்ள உதவுதல்

**49.** வீட்டில் எமது வாழ்வில் புதிய ஊடகம் மேலாதிக்கத்தை எடுத்துக் கொண்டதாக ஒரு குறித்த பேச்சாளர் சுட்டிக் காட்டியிருந்தார். மேற்படி கூற்றுக்கு மிகத் தொடர்பான ஒன்றாக அமைவது
(1) புதிய ஊடகப் பயன்பாட்டினால் வன்முறைகள் அதிகரிக்கின்றன.
(2) புதிய ஊடகத்தைப் பயன்படுத்துவதற்கான செலவினம் குறைந்துவிட்டது.
(3) புதிய ஊடகம் பற்றிய விளங்கறிவு அதிகரித்திருப்பதால் அவ்வாறான விடயம் நடைபெறுகிறது.
(4) புதிய ஊடகத் தொழினுட்பத்தின் வலு வேகமாக அதிகரித்துள்ளது.
(5) புதிய ஊடகப் பாவனையின் அதிகரிப்பினால் தனியாட்கள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள்.

**50.** ஊடகத்தில் இலக்குகள் மற்றும் வகிபங்கை வரைவிலக்கணப்படுத்தும்போது ஊடகக் கோட்பாடு மற்றும் பயன்பாடு பற்றிய இரண்டு மிகப் பிரபலமான அணுகுமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவையாவன
(1) சமூக அடிப்படை மற்றும் முயற்சியாளர் அடிப்படை அணுகுமுறை
(2) தகவல் மற்றும் செல்வாக்கு அணுகுமுறை
(3) சமூக மற்றும் தனியாள் அணுகுமுறை
(4) பொழுதுபோக்கு மற்றும் செய்தி அணுகுமுறை
(5) வணிக நோக்கு மற்றும் பொதுச் சேவை அணுகுமுறை

* * *

AL/2016/29/T-II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය II
தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் II
Communication & Media Studies II

29 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

**அறிவுறுத்தல்கள்:**

* **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **20** புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** பாடசாலை இலக்கியக் கழகத்தில் அனைவருக்கும் போதனை தரக்கூடிய உரையினை நிகழ்த்திய ஆசிரியர், பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பேச்சாற்றல் திறன் ஒருவரின் வாழ்வை ஒளிமயமாக்கும் எனக் குறிப்பிட்டார்.

(i) பயன்பெறுதியுள்ள பேச்சாளர் ஒருவரின் **நான்கு** பண்புகளைப் பெயரிடுக.

(ii) நடிப்பினை அடிப்படையாகக் கொண்ட நாட்டார் படைப்புகள் (folklore) **நான்கினைப்** பெயரிட்டு, அவற்றுள் **ஒன்றினைச்** சுருக்கமாக விவரிக்குக.

(iii) செவிமடுத்தல் தேர்ச்சியைப் பாதிக்கும் **நான்கு** அம்சங்களைப் பெயரிட்டு, அவற்றுள் **இரண்டினை** விவரிக்குக.

(iv) முறைசாராத் தொடர்பாடலின் **நான்கு** பண்புகளை உதாரணங்களுடன் விவரிக்குக.

**2.** (i) தொடர்பாடல் பற்றிய வில்பர் ஷ்ராமின் வரைவிலக்கணத்தைத் தருக.

(ii) (அ) சமூகமயமாதலில் செல்வாக்குச் செலுத்தும் **நான்கு** நிறுவனங்களைப் பெயரிடுக.

(ஆ) பிள்ளைகளின் சமூகமயமாதலில் தொலைக்காட்சி ஊடகம் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகிறது என்பதைச் சுருக்கமாக விவரிக்குக.

(iii) நிறுவனமொன்றில் பொதுசனத் தொடர்பைப் பேணுவதில் பயன்படுத்தப்படக்கூடிய புதிய ஊடக வழிமுறைகள் **மூன்றை** உதாரணங்களுடன் விளக்குக.

(iv) பூகோளமயமாதல் எண்ணக்கருவுடன் தொடர்புடைய **நான்கு** அம்சங்களின் அடிப்படையிலான கட்டுரை ஒன்றை, செய்திப்பத்திரிகை ஒன்றுக்கு, **250 சொற்களுக்குக் குறையாமல்** எழுதுக.

**3.** சில நாடுகளில் நூலொன்றை அச்சிடுவதற்கு முன்னர் அதன் கையெழுத்துப் பிரதிக்கு அரசாங்க அதிகாரிகளின் அனுமதியைப் பெற்றாக வேண்டும்.

(i) மேற்படி சந்தர்ப்பத்துடன் தொடர்புடைய தொடர்பாடல் எண்ணக்கருக்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

(ii) வெகுசன ஊடகங்களில் வாயிற்காப்பாளர்களின் வகிபங்கினால் செய்திகளில் ஏற்படும் மாற்றங்கள் **இரண்டை** விளக்குக.

(iii) தற்கால வெகுசன ஊடகங்கள் பெறுநர்களைக் கவர்வதற்காகப் பயன்படுத்தப்படும் உபாயங்கள் **நான்கினைப்** பெயரிட்டு, அவற்றுள் **இரண்டினை** உதாரணங்களுடன் விளக்குக.

(iv) பிரதான தொடர்பாடல் இடையூறுகள் **இரண்டு,** செய்திப்பத்திரிகை ஊடகத்தில் தோன்றக்கூடிய வகையை ஒவ்வொன்றுக்கும் **இரண்டு** உதாரணங்கள் தந்து விவரிக்குக.

**4.** தற்போதைய சமூகத்தில் வேறுபட்ட வடிவங்களிலான முரண்பாடுகள் பெருமளவில் தோற்றம் பெறுகின்றன. முரண்பாடுகள் மனித சமூகத்தில் இயற்கையானவை என்பதுடன் முரண்பாடுகள் இல்லாத மனித சமூகம் இல்லை என்பதும் பல அவதானிகளின் கருத்தாக உள்ளது.

(i) முரண்பாடுகள் தொடர்பான ஜோஹன் கல்ரங்கின் (Johan Gultung) மாதிரியை வரைந்து, அவற்றைப் பெயரிடுக.

(ii) 'மனச்சோர்வு (Depression)' என்பதைச் சுருக்கமாக அறிமுகப்படுத்தி, அதனுடன் தொடர்பான ஆளுள் தொடர்பாடலின் **நான்கு** பண்புகளைப் பெயரிடுக.

(iii) மன அழுத்தத்தின் (Stress) பிடியிலிருந்து விடுபடப் பிரயோகிக்கக்கூடிய **ஆறு** தொடர்பாடல் வழிமுறைகளைப் பெயரிட்டு, அவற்றுள் **ஒன்றை** விவரிக்குக.

(iv) ஊடக வன்முறையிலிருந்து விலகியிருப்பதற்காகப் பெறுநர் கொண்டிருக்கக்கூடிய **நான்கு** தேர்ச்சிகளை விவரிக்குக.

[பக். 2 ஐப் பார்க்க

5. (i) தொலைக்காட்சி வர்த்தக விளம்பரங்கள் வழியாக வாடிக்கையாளருக்குக் கிடைக்கக்கூடிய **நான்கு** நற்பயன்களைப் பெயரிடுக.

(ii) திருமணவைபவமொன்றில் நிகழக்கூடிய வாய்மொழி சாராத தொடர்பாடல் வழிமுறைகள் **ஆறினைக்** குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்றினைச்** சுருக்கமாக விவரிக்குக.

(iii) புதிய ஊடகத்தின் மொழிப்பாவனையால் மரபார்ந்த மொழிகள் சந்திக்கும் **நான்கு** சவால்களைப் பெயரிட்டு, அவற்றுள் **இரண்டினை** விளக்குக.

(iv) ஒரு செய்தியைப் படைப்பாக்க வழியில் அளிப்பதற்கான உபாயங்களைத் தீர்மானிப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டிய **நான்கு** அம்சங்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டினை** உதாரணங்களுடன் விளக்குக.

6. (i) உள்ளூர்ப் பண்பாட்டில் இலத்திரனியல் ஊடகங்களின் தீய விளைவுகளுக்குக் காரணமான **நான்கு** அம்சங்களைக் குறிப்பிடுக.

(ii) ஊடகக் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பான **ஆறு** அம்சங்களைப் பெயரிட்டு, அவற்றுள் **ஒன்றைச்** சுருக்கமாக விவரிக்குக.

(iii) ஊடகச் சந்தையின் (media market) செயற்பாட்டினை **மூன்று** அம்சங்களுடன் விளக்குக.

(iv) திரைப்பட ஊடகம், ஏனைய ஊடகங்களை விடத் தனித்துத் தெரியும் **நான்கு** அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டுரை ஒன்றை வரைக.

7. ஊடகவியலாளர்களின் விருது வழங்கும் நிகழ்வொன்றில் முரண்பாடான அம்சமொன்றின் பேரிலான வார்த்தைப் பரிமாற்றமொன்று இரண்டு மக்கள் குழுக்களிடையே இடம்பெற்றது. இவ்வாறான சந்தர்ப்பமொன்றில் நாகரிகம் பேணப்பட வேண்டுமென அதிகமான மக்கள் சுட்டிக்காட்டினர்.

(i) மரபுசாராத மொழிப்பாவனையின் **நான்கு** பண்புகளைப் பெயரிடுக.

(ii) ஊடகப் பண்பாட்டால் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் **ஆறினைக்** குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்றினைச்** சுருக்கமாக விவரிக்குக.

(iii) தொடர்பாடலில் நாகரிகம் முக்கியம் பெறும் விதத்தை **மூன்று** அம்சங்களைக் கொண்டு விளக்குக.

(iv) ஊடக விமர்சகர் ஒருவருடைய பண்புகள் **நான்கினைப்** பெயரிட்டு, அவற்றுள் **இரண்டினை** விபரமாக விளக்குக.

* * *

More Past Papers at
tamilguru.lk